வரலாறு

சரியான விடையைத் தெரிவு செய்க.

1 ஏன் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் மீண்டும் சரவாக் மற்றும் வட போர்னியோவிற்கு வருகை புரிந்தனர்?

A மக்களின் நலத்தை விசாரிக்க

B மக்களின் தொகையை அறிய

C மக்களின் கருத்துகளைக் கண்டறிய

2 மலேசிய ஒற்றுமை கலந்தாய்வு செயற்குழுவின் நோக்கம் யாது?

A மக்களிடையே சுதந்திரத்தைப் பற்றிய சிந்தனையை விளக்க

B மக்களிடையே ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டுமென்பதனை விளக்க

C மக்களிடையே மலேசிய உருவாக்க சிந்தனையை விளக்க

3

| |
|---|
| மலேசிய உருவாக்கம்<br>சுதந்திரம் |

மேலே குறிப்பிட்டுள்ள சிந்தனையை நிலைநட்ட நம் நாட்டுத் தலைவர்கள் எம்மாதிரியான அணுகுமுறையைத் தேர்ந்தெடுத்தனர்.

A பேச்சுவார்த்தை

B போர்

C போராட்டம்

4 கீழே கொடுக்கப்பட்டுள்ள நாடுகளில் எது மலேசியா உருவாக்கத்தை எதிர்த்தது?

A சிங்கப்பூர்

B இந்தோனேசியா

C வட போர்னியோ

5 கீழே உள்ள கூற்றுகளில் எது சரியானது?

A மலேசிய உருவாக்க சிந்தனை இங்கிலாந்து அரசியாரால் முன்வைக்கப்பட்டது.

B சரவாக் மலேசியாவில் இணைய கட்டாயப்படுத்தப்பட்டது

C மலேசிய உருவாக்கத்தை ஆதரிக்கும் முடிவு மக்களிடமே வழங்கப்பட்டது

6 கோபோல்ட் ஆணையம் எதற்காக அமைக்கப்பட்டது?

A மலேசிய மக்களின் குறைகளை அறிந்து கொள்ள

B மலேசிய மக்களின் எண்ணங்களை அறிந்து கொள்ள

C மலேசிய மக்களின் சிறப்புகளை அறிந்து கொள்ள

7 எந்த அமைப்பின் வழி அனைவருக்கும் கல்வி என்னும் கொள்கையை நிலைநிறுத்த மலேசியா போராடியது?

A காமன்வெல்த் அமைப்பு

B UNESCO(ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாடு அமைப்பு)

C OIC (உலக இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு)

8 மலேசியாவிற்குக் கிடைத்த அங்கீகாரத்தில் இதுவும் ஒன்று

A ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு மன்றத்தில் உறுப்பியம் பெற்றது

B உலக இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பின் தலைவராக இருப்பது

C கொழும்பு திட்டத்தின் வழி நம் நாட்டு மாணவர்களுக்கும் கல்வி நிதி கிடைத்தது

9 மாபிலிண்டோ (MAPHILINDO) என்பது எத்தனை நாடுகளை உள்ளடக்கியது?

A 1

B 2

C 3

10 கம்யூனிஸ்ட் ஊடுறுவலை ஒடுக்கவே இவ்வமைப்பு அமைக்கப்பட்டது.

A ASA (தென்கிழக்காசியக் கூட்டமைப்பு)

B MAPHILINDO (மபிலிண்டோ)

C ASEAN (தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு)